CC No : 80/2013
பெயர் : சத்தியமூர்த்தி
த/பெ : கணேசன்
PW : 1
Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 18th day of September 2025.
(A1, A2, A4 present. A3 absent. 317 Cr.P.C petition filed and allowed).
சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு முதல் விசாரணை தொடர்ச்சி

<u>1 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

4. இந்த வழக்கில் 27.04.2010 அன்றுதான் எதிரிகள் மீது கோவில்பட்டி கிழக்கு காவல் நிலையத்தில் புகார் கொடுத்தீர்களா என்றால் தபால் மூலம் அன்றுதான் புகார் கொடுத்தேன். 1 வது எதிரி ராமானுஜம் KA03/MH-4050 என்ற வாகனத்தினை மறுபதிவு செய்வதற்காக 21.04.2010 அன்று எங்களது அலுவலகத்தில் விண்ணப்பம் செய்தார் என்றால் சரிதான். பொதுவாக என்னிடம் விண்ணப்பம் கொடுத்த பிறகுதான் மனு குறித்து பரிசீலனை செய்யப்படும். அதன் பிறகுதான் தூத்துக்குடி வட்டார போக்குவரத்து அலுவலர் மற்றும் மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர் ஆகியோர்களிடம் வாகனம் குறித்த உண்மை தன்மை கேட்கப்படும், மற்றும் கோப்புகள் குறித்து மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.
5. மேற்படி வாகனம் குறித்து பெங்களூர் வட்டார போக்குவரத்து அலுவலரிடம் தொலைபேசியில் தகவல் தெரிவித்து அதுகுறித்த ஆவணத்தை இ-மெயில் மூலமாகவும் மற்றும் பேக்ஸ் மூலமாகவும் பெறபட்டடதாக முதல் விசாரணையில் சொல்லியுள்ள நிலையில் அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் செய்துள்ளேன். வண்டியின் சம்பந்தப்பட்ட ஆவணங்களை பெங்களுரூக்கு எந்தெந்த தேதியில் சென்று வாங்கினீர்கள் என்றால் 23.07.2010, 24.07.2010, 25.07.2010 ஆகிய தேதிகளில் சென்றேன். இ-மெயிலில் பெங்களுரு ஆர்டிஓ அலுவலகத்தில் அனுப்பட்ட வேண்டுகோள் கடிதம் மற்றும் அதற்கான பெறப்பட்ட ஆவணங்களை போலீசார் விசாரணையிலோ, நீதிமன்றத்திலோ தாக்கல் செய்தீர்களா என்றால் போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன், அதற்கான ஆவணங்களை கொடுத்தேனா என்று எனக்கு ஞாபகம் இல்லை.
6. அ.சா.ஆ 2 நகல் ஆவணம் என்றால் நகல் ஆவணத்தில் அசலாக பெறப்பட்ட ஒப்புகை. KA02/MC-7309, KA02/A-9306, KA02/A-1410,KA02/AB6860 ஆகிய வாகனங்கள் குறித்து பெங்களூர் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் பி-ரிஜிஸ்டர் Extract கேட்டு நேரடியாக

கொடுக்கபட்ட வேண்டுகோள் கடிதம் அ.சா.ஆ.12 என்றால் சரிதான். அதனுடைய அசல் ஆவணத்தை நீதிமன்றத்திலோ, வழக்கு விசாரணை அதிகாரியிடமோ தாக்கல் செய்யவில்லை என்றால் நீண்டகாலம் ஆகிவிட்டதால் கோப்பில் உள்ளதா, விசாரணை அதிகாரியிடம் கொடுத்துள்ளேன் அல்லது பகுதி அலுவலகம் கோவில்பட்டியில் உள்ள அலுவலக கோப்பில் உள்ளதா என்று ஆய்வு செய்ததால்தான் சொல்ல முடியும்.

7. போலீசார் விசாரணையில் மேற்படி ஆவணங்களை காண்பித்தீர்களா என்றால் காவல் ஆய்வாளருடன் சென்றுதான் பெங்களூர் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் அசல் வேண்டுகோளை சமர்பித்து அதற்கான பி–பதிவேடு ஆவணங்களை பெற்றேன். வாகன எண் KA02A1410 வாகனத்திற்குரிய அசல் சான்றிதழ்கள் எதுவும் பெங்களுரு வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் இல்லை என்று மேற்படி அலுவலகத்திலிருந்து சான்றிதழ்கள் வழங்கியுள்ளார்கள் எனறால் சரிதான், மேற்படி வாகனம் KA02A1410 என்ற வாகனத்தின் பி–பதிவேடு சான்று வட்டார போக்குவரத்து அலுவலர் பெங்களூர் West லிருந்து வழங்கியுள்ளார்கள்(KA02).

8. அ.சா.ஆ.15 பெங்களூர் வட்டார போக்குவரத்து அலுவலகம் மேற்கிலிருந்துதான் கொடுத்தாக உள்ளது என்றால் சரிதான். ஒவ்வொரு வாகனத்திற்கும் உண்மை தன்மை அறிய தனித்தனியாகதான் வேண்டுகோள் கடிதம் கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை, வாகனத்தின் கொடுக்கப்பட்ட வேண்டுகோள் எந்தெந்த அலுவலகத்தில் கேட்கப்பட்டதோ அது அந்தெந்த அலுவலகங்களில் தேவைக்கேற்ப வழக்கில் சம்பந்தபட்டுள்ள வாகனங்களின் பதிவெண்களுக்கேற்ப ஒன்றோ, இரண்டோ அல்லது மூன்றோ, நான்கோ வாகனங்களுக்கு கேட்கப்பட்டு அதற்கென தனித்தனியாக வேண்டுக்கோள் கடிதம் கொடுக்கப்பட்டது.

9. மூன்று தேதிகளில் வேண்டுகோள் கடிதம் கொடுத்தற்கு தனித்தனியாக எண்கள் கொடுத்தீர்களா என்றால் ஒவ்வொரு அலுவலகத்திற்கும் தனிதனியாக இரண்டு நாட்களில் தனித்தனி எண்களிலோ அல்லது ஒரே எண்களிலோ வேண்டுகோள் கடிதம் கொடுக்கப்பட்டது. பொதுவாக ஒவ்வொரு கோப்புகளுக்கும் தனித்தனி எண் கொடுப்போம். **(சாட்சி தற்போது தனித்தனி எண்ணாக கொடுத்தோமா அல்லது ஒரே எண்ணாக கொடுத்தோமா என்று ஞாபகம் இல்லை என்று கூறுகிறார்).** வாகன எண். KA05MA9160 என்ற வாகனத்திற்குரிய உண்மை தன்மை கேட்டு பெங்களூர் ஜெய்நகர் வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு 10.05.2010 அன்று வேண்டுகோள் கடிதம் கொடுக்கப்பட்டதா என்றால் சரிதான்.

10. உண்மை தன்மை குறித்து கேட்டவுடன் அன்றே பதில் கிடைத்தா என்றால் அன்றும் கொடுத்தார்கள், அதற்கு அடுத்த இரண்டு தினங்களிலும் கொடுத்தார்கள். அ.சா.ஆ.17 பெங்களூர் அலுவலகத்திற்கு அனுப்பட்ட தேதி 21.05.2010 யில் இ-மெயிலும், பதிவு அஞ்சலிலும், ஆவணத்தில் குறிப்பிடபட்டுள்ள வாகனங்களின் உண்மை தன்மை குறித்து வேண்டுகோள் கடிதம் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். 10.05.2010 தேதியிட்ட ஆவணத்தில் மேற்படி வாகனங்களின் உண்மை தன்மை பற்றிய வேண்டுகோள் கடிதம் கமிஷனர் ஆப் டிரான்ஸ்போர்ட், பெங்களூர் அவர்களுக்கு 11.06.2010 ல் அனுப்பட்டுள்ளதாக குறிப்பிடபட்டுள்ளதாக உள்ளது என்றால் சரியல்ல, மோட்டார் வாகன ஆய்வாளர் கோவில்பட்டியிலிருந்து வட்டார போக்குவரத்து அலுவலர் ஜெய்நகர் பெங்களூர் அவர்களுக்கு வாகனம் KA05MA9160 என்ற வாகனத்திற்கு பி-பதிவேடு சான்று கேட்டு 23.07.2010 அன்று கொடுக்கபட்ட வேண்டுகோளுக்கு பெங்களூரு தெற்கு வட்டார போக்குவரத்து அலுவலகத்திலிருந்து அசலாக பெறப்பட்ட ஒப்புகை கையெப்பத்துடன்கூடிய கடிதம் ஆகும். அ.சா.ஆ.17 ல் தேதிகள் வேறுபாடாக உள்ளது என்றால் சரியல்ல.

11. அ.சா.ஆ.17 ல் கமிஷனர் ஆப் டிரான்ஸ்போர்ட், பெங்களூர் அவர்களுக்கு 11.06.2010 அன்று மேற்படி வாகனங்கள் குறித்து அறிக்கை கொடுத்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கிலிருந்து நான் செய்த தவறுகளை மறைப்பதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அ.சா.ஆ 18 ல் வாகன எண், KA09/MD-0321 என்ற வாகனம் குறித்த மைசூர் டிரான்ஸ்போர்ட் ஆபிஸரிடம் கேட்கப்பட்ட ஆவணத்தை அன்றே கொடுத்தாரா வேறுதேதியில் கொடுத்தாரா என்றால் ஞாபகம் இல்லை. அ.சா.ஆ.19 ல் Engine number, Chasis number குறித்து குறிப்பிடபட்டுள்ளது, ஆனால் அந்த வண்டியின் வாகன எண் எதுவும் குறிப்பிடபடவில்லை என்றால் சரிதான். அதனால் அந்த வண்டி யாருடையது என்று தெரியாது என்றால் சரிதான்.

12. அ.சா.ஆ.7 என்றைக்கு பெங்களூருக்கு அனுப்பினீர்கள் என்றால் KA03ME7948 பி-பதிவேடு நகல் எந்த தேதியில் பெறபட்டது என்று எனக்கு ஞாபகம் இல்லை, ஆனால் நான்தான் நேரில் பெற்றேன். வாகன எண் KA02MC7309 என்ற வாகனத்திற்கு மறுபதிவு வேண்டி 1வது எதிரி 29.09.2009 ல் விண்ணப்பம் செய்துள்ளார் என்றால் சரிதான். அ.சா.ஆ 23 ல் பக்கம் 47 ல் 30.09.2009 ல் பெங்களூரு வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு KA02/MC7309 என்ற வாகனத்திற்கு No objection சான்று மற்றும் உண்மை தன்மை குறித்தும் கேட்டு பதிவு தபால் மூலம் உங்களது அலுவலகத்திலிருந்து பெங்களூர் ஆர்.டி.ஓ

அலுவலகத்திற்கு அனுப்பட்டுள்ளது என்றாலும், (பக்கம் 49)ல் உள்ள அதற்கான ஒப்புதல் அட்டையும் சமூகம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரிதான். அதற்கான பதில் அறிவிப்பு பெங்களூர் கிழக்கு வட்டார போக்குவரத்து அலுவலரால் உங்கள் அலுவலகத்திற்கு 05.10.2009 அன்று பதிவு தபாலில் பதில் வரபட்டுள்ளது என்றால் சரியல்ல, ஆனால் நீதிமன்றத்தில் அ.சா.ஆ.23ல் 51ஆக முதல் விசாரணையில் நான் ஆவணமாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். ஆனால் தற்போது வேண்டுமென்றே உண்மைக்கு மாறாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

13. மேற்படி வாகனம் குறித்து வட்டார போக்குவரத்து அலுவலர் தூத்துக்குடி அவர்களுக்கு 17.09.2009ல் வாகனம் சம்பந்தப்பட்ட ஆய்வறிக்கையை (அ.சா.ஆ 23ல் பக்கம்9) நான் சமர்பித்துள்ளேன் என்றால் சரிதான். அந்த அறிக்கையில் KA02MC7309 என்ற வாகனத்தின் Engine number, Chasis number சரியாக உள்ளது என்றும், பெங்களூர் வட்டார போக்குவரத்து அலுவலகத்திலிருந்து தடையில்லா சான்றிதழ் வாங்கபட்டுள்ளது என்றும், மேற்படி வாகனத்தில் எடுத்த அடிசட்ட நகலுடன் ஒப்பிட்டு பார்த்து சரியாக உள்ளது என்று ஆய்வறிக்கை வழங்கியுள்ளேன் என்றால் சரிதான். அதற்கு தூத்துக்குடி வட்டார போக்குவரத்து அலுவலர் (அ.சா.ஆ.23, பக்கம் 67–73ல்) மறுபதிவு செய்ய ஒப்புதல் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். நான் ஆய்வறிக்கை வழங்கிய பிறகுதான் தூத்துக்குடி வட்டார போக்குவரத்து அலுவலர் மேற்படி வாகனத்தின் மீது வழக்குகள் ஏதும் உள்ளதா எனக் கேட்டு தூத்துக்குடி மாவட்ட கண்காணிப்பாளர் அவர்களுக்கு வேண்டுக்கோள் கடிதம் கொடுப்பார் என்றால் சரிதான். அதன்படி மேற்படி வாகனத்திற்கு 25.02.2009ல் தூத்துக்குடி மாவட்ட கண்காணிப்பாளர் அவர்களிடமிருந்து தூத்துக்குடி வட்டார போக்குவரத்து அலுவலர் அவர்களுக்கு KA02MC7309 என்ற வாகனத்தின் மீது எந்தவித வழக்குகளும் இல்லை என்று சான்று கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல.

14. அ.சா.ஆ 23ல் பக்கம் 37ல் உள்ள மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளரால் 25.02.2009ல் வழங்கிய சான்றை நான்தான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்று முதல் விசாரணையில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். அ.சா.ஆ. 23ல் பக்கம் 31ல் மேற்படி வாகனத்தின் சம்பந்தப்பட்ட ஆவணங்களை எங்கள் அலுவலகத்தில் தாக்கல் செய்வதற்கு சங்கரன் என்பவர் நியமிக்கபட்டுள்ளதாக அதிகாரமளிப்பு கடிதத்தை நான் முதல் விசாரணையில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அ.சா.ஆ 23ல் பக்கம் 29ல் அபிடவிட்டை தாக்கல் செய்துள்ளவர்களின் பெயர், விவரங்கள், முகவரி

இல்லை என்றால் சரிதான். வாகன எண் KA03MH4050 க்காக வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் அ.சா.ஆ.22 ல் பக்கம் 9 ல் நான் வழங்கிய ஆய்வறிக்கை 22.12.2009 ல் பெங்களூரு ஆர்.டி.ஓ கிழக்கு அவர்களால் தடையில்லா சான்று வழங்கப்பட்டுள்ளது என்றும், மேற்படி வாகனத்தின் Engine number and chasis number யை ஒப்பிட்டு பார்த்ததில் சரியாக உள்ளது என்று தூத்துக்குடி வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் அறிக்கை சமர்பித்துள்ளேன் என்றால் சரிதான்.

15. அந்த ஆய்வறிக்கையில் பெங்களூரு ஆர்.டி.ஓ வாகனத்திற்காக Form28 ல் 22.12.2009 ல் வழங்கியதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். அந்த ஆய்வறிக்கை 21.04.2010 என கையெழுத்து செய்துள்ளேன் என்றால் சரிதான். ஆனால் புகார்மனு மேற்படி வாகனம் குறித்து 27.04.2010 ல் தபால் மூலம் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். ஆனால் நான் கொடுத்த புகாரில் 21.04.2010 அன்று எதிரி கொடுத்த விண்ணப்பம் குறித்து சந்தேகம் ஏற்பட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். என்னிடம் வாகனம் மறுபதிவிற்காக விண்ணப்பங்கள் சமர்பிக்கபட்ட பின்பு அதனை பரிசீலனை செய்து அதன் பின்புதான் தூத்துக்குடி வட்டார போக்குவரத்து அலுவலரிடம் அறிக்கை சமர்பிப்பேன் என்றால் சரிதான். நான் கொடுத்த ஆய்வறிக்கைக்கு பின்புதான் தூத்துக்குடி மாவட்ட கண்காணிப்பாளரால் தூத்துக்குடி வட்டார போக்குவரத்து அலுவலரிடம் மேற்படி வாகனத்திற்கு ஏதாவது வழக்குள்ளதா என்று கேட்பார் என்றால் சரிதான்.

16. இந்த வழக்கில் 24.03.2010 அன்று தூத்துக்குடி மாவட்ட கண்காணிப்பாளர் அவர்கள் தூத்துக்குடி வட்டார போக்குவரத்து அலுவலருக்கு மேற்படி வாகனத்தின் மீது வழக்கு ஏதும் இல்லை என்று அறிக்கை கொடுத்துள்ளார் என்றால் தூத்துக்குடி மாவட்டத்தில் மட்டும் வழக்கு இல்லை என்று அறிக்கை கொடுத்துள்ளார். மேற்படி அறிக்கையின் அசல் எங்கள் அலுவலகத்தில்தான் உள்ளது. இந்த வழக்கில் 29 ஆம் பக்கமாக உள்ள பிரமாண வாக்குமூலத்தில் தாக்கல் செய்தவரின் அப்பாவின் பெயர், முகவரி எதுவும் குறிப்பிடபடவில்லை என்றால் சரிதான். அந்த அபிடவிட் தூத்துக்குடி ஆர்.டி.ஓவிற்கு அனுப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி வாகனத்தின் சம்பந்தபட்ட ஆவணங்களை தாக்கல் செய்வதற்கும், பெறுவதற்கும் சுந்தர் என்பவர் நியமிக்கபட்டுள்ளதாக அதிகாரமளிப்பு கடிதம் (அ.சா.ஆ 23, பக்கம் 41 ல்) தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான், அதிகாரம் பெற்றவரின் கையொப்பம் அதில் இல்லை.

17. வாகன எண் KA03MV7948 என்ற வாகனத்தினை மறுபதிவு செய்வதற்காக யார், எப்போது விண்ணப்பம் செய்தார் என்ற விவரம் குறித்த

ஆவணங்களை நீதிமன்றத்திலோ, விசாரணை அதிகாரியிடமோ நான் சமர்பிக்கவில்லை (அ.சா.ஆ.7) என்றால் சரிதான்.

**<u>3 வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

18. வாகன எண் KA03MC9403 என்ற எண் கொண்ட வாகனத்தை 3 வது எதிரி பெயர் உரிமை மாற்றம் செய்ய 07.12.2010 அன்று மனு செய்தார் என்றால் 01.03.2010 அன்று மனு ஏற்கபட்டது. மேற்படி வாகனத்தின் உண்மை தன்மை அறிய உங்கள் அலுவலகத்திலிருந்து பெங்களுரு ஆர்.டி.ஓ அவர்களுக்கு 04.01.2010 அன்று தங்களது அலுவலக கடித எண் 0002/K1/200 என்ற அலுவலக கடித எண் (அ.சா.ஆ.24, பக்கம் 45) மூலம் பதிவு தபால் அனுப்பட்டது என்றால் சரிதான். மேற்படி நீங்கள் கேட்ட உண்மை தன்மை சான்று தன்மை குறித்து 20.01.2010 அன்று பெங்களுரு ஆர்.டி.ஓ அலுவலகத்தலிருந்து பதில் அனுப்பபட்டுள்ளது (அ.சா.ஆ 24, பக்கம் 49)என்றால் சரிதான்.

19. நான் பதிவு தபாலில் தான் அனுப்பினேன், அந்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். தூத்துக்குடி வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் 31.12.2009 ல் மேற்படி வாகனத்தின் ஆய்வறிக்கையை நீங்கள் கொடுத்துள்ளீர்கள் என்றால் சரிதான். அதில் பெங்களுரு ஆர்.டி.ஓ மேற்கு அலுவலக எண். 52731/K4/2009 தேதி 10.06.2009 தடையில்லா சான்று வழங்கப்பட்டுள்ளதாக கூறியுள்ளீர்கள் என்றால் சரிதான். அதில் மேற்படி வாகனத்தின் Engine number, Chasis number சரியாக உள்ளது என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சமர்பிக்கபட்ட பதிவு சான்றின் ஆய்வுகளின்படி சரியாக உள்ளது என்று சான்று வழங்கினேன். மேற்படி வாகனத்திற்கு புதிய எண் கொடுக்கபட்டதாக சொல்லி பெங்களுரு ஆர்.டி.ஓ அவர்களுக்கு நான் 02.03.2010 அன்று கடிதம் அனுப்பினேன் என்றால் சரிதான்.

20. மேற்படி கடிதத்தில் 26.06.2009 ல் (அ.சா.ஆ. 24, பக்கம் 53 ல்) என்.ஓ.சி issue by your authority என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி என்.ஓ.சியை நீதிமன்றத்திலோ, விசாரணை அதிகாரியிடமோ கொடுத்தீர்களா என்றால் கொடுத்தேன். இந்த வழக்கில் தாக்கல் செய்யபட்ட பிரமாண வாக்குமூலத்தில் மேற்படி விவரம் குறிப்பிடபடவில்லை என்றாலும், எந்த கையொப்பமும் இல்லை என்றாலும் சரிதான். தூத்துக்குடி வட்டார போக்குவரத்து அலுவலருக்கு மேற்படி வாகனத்திற்கு மறுபதிவு செய்வதற்காக (அ.சா.ஆ 24, பக்கம் 44 முதல் 48 வரை) பரிந்துரைத்து 26.02.2010 அன்று கடிதம் அனுப்பியுள்ளேன் என்றால் சரிதான். தூத்துக்குடி காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்திலிருந்து தூத்துக்குடி வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு 30.11.2009 ல் மேற்படி வாகனத்தின் மீது தூத்துக்குடி

மாவட்டத்தில் எந்தவித வழக்கும் இல்லை என சான்று அளிக்கபட்டது என்றால் சரிதான்.

21. இந்த வழக்கில் ஆவணங்களை தாக்கல் செய்வதற்கு கிருஷ்ணன் என்பவருக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டது என்றால் அதிகாரமளித்த கையெழுத்துள்ளது பெயர் சரியாக தெரியவில்லை. இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் உண்மை நகல் என்றாலும், அசல் ஆவணங்கள் இல்லை என்றாலும் சரிதான், அசல் ஆவணங்கள் அனைத்தும் அரசு ஆணைப்படி நிரந்தர ஆவணங்கள் என்பதால் அவை பகுதி அலுவலகம் கோவில்பட்டியில் வைத்து பாதுகாக்கப்படுகிறது, எனவே சான்றளிக்கப்பட்ட ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. நீதிமன்றம் மூலம் மேற்படி ஆவணங்களை தாக்கல் செய்ய சொன்னால் அலுவலகத்திலிருந்து தாக்கல் செய்வார்கள். அசல் ஆவணங்களை புலன் விசாரணை அதிகாரி என்னிடம் கேட்டாரா என்றால் கேட்டார் நிறந்தர ஆவணம் என்பதால் நகல் ஆவணங்கள் கொடுக்கப்பட்டுள்ளது.

<u>2 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

22. மணி மாலை 07.15 மணி ஆனதால் நேரம் கருதி 2 வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

Taken before me in open court
in the presence of accused and
read over to the witness and
acknowledged by him/her to be
Correct.

Sd/ Tr. K. Anand, B.A, M.L.,
Judicial Magistrate No.1,
Kovilpatti.